Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 11, 2023

புதன்கிழமை ஜனவரி 11, 2023 | ஒளி: 08 கதிர்: 184 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## 14 வருடங்களின் பின்னர் தமிழ் அரசியல் கைதி விடுதலை

விடுதலைப் புலிகள் அமைப்புக்காக அதிநவீன உபகரணங்களை கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, 14 வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரை, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் தரங்க மஹவத்த, செவ்வாய்க்கிழமை (10) விடுதலை செய்தார்.

தொடர்ச்சி P2

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்

# பங்காளிகள் தனிவழி

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்






உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள மூன்று பங்காளிக் கட்சிகளான இலங்கை தமிழரசுக் கட்சி, டெலோ, புளொட் ஆகிய கட்சிகள் தனித்துப் போட்டியிடுவது எனக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு உள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று (10) காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

சம்பந்தன் எம்.பியின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜாவும், பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் எம்.பியும் பங்கேற்றனர்.

தொடர்ச்சி P2

## முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசனுக்கு விருது



2023 பிரவாசி பாரதிய திவாஸ் விருது வழங்கும் நிகழ்வு, பிரதமர் நரேந்திர மோடியால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதில், வீரகேசரி பத்திரிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்)(பிரைவேட்) லிமிட்டெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் சிவகுமார் நடேசனுக்கு இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு விருதை வழங்கி கௌரவித்தார்.

### தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் திரளாவிடின்

## 'வீடு' தேடி வந்தாலும் வாக்களிக்க மாட்டோம்

■ கனகராசா சரவணன்

சமஷ்டி முறையிலான நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை, தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் திரண்டு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு முன்வைக்கவேண்டும். அப்படி முன்வைக்காது விட்டால், தேர்தல் காலங்களில் வீடு தேடிவந்தாலும் வாக்களிக்கமாட்டோம் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## தலைவர் பதவியை துறந்து ஆணைக்குழுவை சந்திக்கலாம்

### அநுர தெரிவிப்பு: பஸ் சாரதி சஜித் என்கிறார்



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நேரடி விவாதத்துக்குத் தான் தயாரென அறிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே. கவின் தலைவர் பதவியிலிருந்து விலகிவிட்டு,

தொடர்ச்சி P2

## இரண்டு முகாம்களே நாட்டில் உள்ளன

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

நாட்டின் தற்போதைய நிலையில் அரசியல் கட்சிகள், அரசியல் கொள்கைகள் ரீதியில் செயலாற்றுவது சிறந்தது அல்ல என்பது எனது சொந்தக் கருத்தென தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, அனைத்து கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராகி வருவதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மொட்டும் யானையும் ஒன்றாகக் கலந்தன

### பொதுச் சின்னத்திலும் தனிச் சின்னங்களிலும் குதிக்கின்றன

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதற்கு ஏகமனதாக இணங்கியுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சிக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (10) காலை பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென

தொடர்ச்சி P2

### ஊடகங்கள் அறிக்கையிடும் வகையில்

## ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப்படவில்லை



ஊடகங்கள் அறிக்கையிட்டு உள்ளதைப் போல, பணியாளர்கள் ஓய்வுபெற்றமை காரணமாக, ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப்படாது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஆஷு மாரசிங்க விவகாரம்

## ஆதர்ஷாவின் முன் பிணை நிராகரிப்பு

ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகரும் பேராசிரியருமான ஆஷு மாரசிங்கவால், தனது நாய் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக கூறிய ஆதர்ஷா கரந்தனா தாக்கல் செய்த முன்பிணை மனுவை, கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், செவ்வாய்க்கிழமை (10) நிராகரித்தார்.

தொடர்ச்சி P2



## பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் செந்தில் தொண்டமான் பங்கேற்றார்

17ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டார்.

இந்த மாநாடு, மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூரில் கடந்த 09, 10ஆம் திகதிகளில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கயானாவின் ஜனாதிபதி இஃப்ரான் அலி, சுரினாமின் ஜனாதிபதி சான் சந்தோகி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் உட்பட வெவ்வேறு நாடுகளில் வாழும் 3,500 வெளிநாடு வாழ் இந்தியர்கள் கலந்துகொண்டனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் தாயாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை, பிரதமர் மோடியிடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் செந்தில் தொண்டமான் தெரிவித்துக்கொண்டார்.

## அரச ஊழியர்களுக்கு கடும் சம்பள சிக்கல்

### தள்ளிப் போகிறது சமூர்த்தி

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

நாம் எதிர்பார்த்ததை விட திறைசேரி மிக மோசமான நிதி நெருக்கடியை இவ்வாண்டு எதிர்கொண்டுள்ளதாக ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்தார் என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, இதனால் அரச ஊழியர்களுக்கு ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான சம்பளத்தை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றார்.

அது மட்டுமன்றி சமூர்த்தி பயனாளிகளின் கொடுப்பனவை வழங்குவதிலும் இரண்டு வாரங்கள் தாமதம் ஏற்படலாம் என்றார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற

தொடர்ச்சி P2

## பரீட்சை குழம்பி விட்டால் பல்கலைக்கழகம் தாமதமாகும்

### பிரதமர் தினேஷ் குணவர்தன

இம்மாதம் முதல் அடுத்த மாதம் மூன்றாவது வாரம் வரை பரீட்சைகள் நடக்கின்றன. உங்கள் பிள்ளைகளும் இதில் இருக்கலாம். இந்தப் பரீட்சையில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான பிள்ளைகள் தோற்றுகின்றனர். இதில் ஏதும் தடை ஏற்பட்டால், பல்கலைக்கழகத்துக்கு செல்வது ஒருவருடம் தாமதமாகும்.

தொடர்ச்சி P2

## நினைத்துப் பார்க்காத வெற்றி நிச்சயம்



எவரும் நினைத்துப் பார்க்காத வெற்றி, மேலவை இலங்கை கூட்டணிக்குக் கிடைக்கும் என தெரிவிக்கும் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, தேர்தல் நடக்குமா என்கிற உறுதியற்ற நிலையே காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதனாலேயே கூட்டணி அமைப்பதில் சில காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும் விரைவிலேயே நல்ல அறிவிப்புகளை வழங்குவோம் என்றார்.

தேர்தல் நடக்குமா என்பது உறுதியாகக் கூற முடியாது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சம்பாதித்த பணங்கள்

தொடர்ச்சி P2

## ஷாப்டரின் சகோதரர் இரகசிய வாக்குமூலம்

பிரபல தொழிலதிபரான தினேஷ் ஷாப்டரின் மரணம் குறித்த நீதவான் விசாரணை கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரியவின் உத்தியோகபூர்வ அறையில் செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற போது, ஷாப்டரின் சகோதரர் 45 நிமிடம் வாக்குமூலம் வழங்கினார்.

எதிர்வரும் 13ஆம் திகதி மேலதிக சாட்சிய விசாரணைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

உயிரிழந்த வர்த்தகரின் இரத்த மாதிரிகள் மற்றும் ஏனைய உடல் மாதிரிகளைப் பயன்படுத்தி டிஎன்ஏ பரிசோதனையை மேற்கொள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய, கடந்த 2ஆம் திகதியன்று அனுமதியளித்தார். மேற்கூறிய மாதிரிகள் மற்றும் சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்ட ஆதாரங்களை டிஎன்ஏ பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் அனுப்புவதற்கு சிஐடிக்கு அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையில் சாட்சியமளிப்பதற்காக தினேஷ் ஷாப்டரின் மனைவி, நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்த டிரிஸ் பெரேரா, பொரளை மயானத்தில் பணியாற்றும் இருவர் கடந்த 4ஆம் திகதி நீதிமன்றத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

## சேபால அமரசிங்கவுக்கு 17 வரை விளக்கமறியல்



கண்டி ஸ்ரீ தலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்ட சமூக ஊடக ஆர்வலர் சேபால அமரசிங்கவை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், செவ்வாய்க்கிழமை (10) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## இரண்டு முகாம்களே நாட்டில் உள்ளன

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எனவே, அரசியல் ரீதியில் இரண்டு முகாம்கள் இலங்கையில் உள்ளதாக தான் நினைப்பதாகவும் ஒன்று நாட்டை பாதுகாப்பதற்காக முன்வரும் முகாம். மற்றையது இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு எந்தவொரு தீர்வையும் முன்வைக்க முடியாத முகாம் என்றார்.

நாட்டை பாதுகாப்பதற்கான முகாமில் உள்ள அனைவரையும் இணைத்துக்கொண்டு பயணிக்கவுள்ளதாகவும் நாட்டை இங்கிருந்து வேறொரு திசைக்கு கொண்டு செல்லும் அரசியல் கொள்கையே வேண்டும் என்றார்.

ஒவ்வொரு கட்சிகளும் தேர்தலுக்கு முகம்கொடுக்க தயாராகி வருவதாகவும் நாமும் அதற்கு தயாராகவுள்ளோம் என தெரிவித்த அவர், கொழும்பிலுள்ள 13 தேர்தல் தொகுதிகளில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளோம் என்றார்.

நாடு இன்று வீழ்ந்திருக்கும் நிலையானது வரலாற்றில் என்றும் ஏற்பட்டதில்லை. நாம் மிகவும் அவதானத்துடன் வாழும் நிலையில் உள்ளோம்.

எம்மிடம் அந்நிய செலாவணி இன்மையால் வேறு நாடுகளிடமிருந்து வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவது குறித்து சிந்திக்க வேண்டும். வெளிநாட்டுக் கடன்கள் கிடைக்காவிடின் ஓர் அடியேனும் முன்னோக்கி வைக்க முடியாது என்றார்.

## தலைவர் பதவியை துறந்து ஆணைக்குழுவை சந்திக்கலாம்

ஜனாதிபதி என்கிற வகையில் தேர்தல் ஆணைக்குழுவை தான் விரும்பியவாறு சந்திக்க முடியும் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் அம்மா எவ்வாறு சுகபோக வாழ்க்கை வாழ்கிறார் என்பது எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் பொதுமக்களின் பணத்தில் அவர் சுகபோக வாழ்க்கை வாழ்கிறார் என்பதே எனக்குள்ள பிரச்சினையாகும் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாஸ, சிக்கலான நுழைவாயில் ஒன்றில் லாவகமாக பஸ்ஸை செலுத்தியதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா புகழ்ந்திருந்தார். ஆகையால் சஜித்துக்கு நாட்டை நிர்வாகிக்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார். எனினும், நாட்டை ஆட்சி செய்ய, இதுமட்டும் தகைமை இல்லை. ஜனாதிபதியாகுவதற்கு பஸ் சாரதி என்பது தகைமையல்ல என்றார்.

சஜித் என்பவர் பொருட்களை விநியோகிக்கும் அரசியல்வாதியாவார். பாடசாலைகளுக்கு பஸ்களை வழங்கும் சஜித்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால், சஜித் பொருட்களை வழங்கும் அரசியலை செய்கிறார். அதனால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது.

அபிவிருத்தி தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித்துடன் நேரடியான விவாதத்துக்கு நான் தயாராக இருக்கிறேன் எனவும் சவால் விடுத்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் ஆணைக்குழுவை ஐ.தே.கவின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்தது தவறு. ஜனாதிபதி என்றவகையில் தேர்தல் ஆணைக்குழுவை அவர் சந்திக்க விரும்பினால் முதலில் ஐ.தே.கவின் தலைவர் பதவியிலிருந்து அவர் விலக வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தேர்தல் தொடர்பான அறிவிப்புகளை விடுப்பதற்கு கடந்த நவம்பர் மாதம் போதியளவு கால அவகாசம் இருந்தது. ஆனால், அவர்கள் அதனை செய்யாது அரசாங்கத்தின் தேவைக்கு ஏற்பவே செயற்படுகிறார்கள்.

சட்டரீதியான தேவை ஒன்றை அரசாங்கத்துக்கு வழங்கவே நவம்பர் மாதத்தில் தேர்தல் அறிவிப்புகளை விடுக்காமல், ஜனவரி மாதத்தில் விடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# பங்காளிகள் தனிவழி

டெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, பொதுச்செயலாளர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி, ஹென்றி மகேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். புளொட் சார்பில் ஆர்.ராகவன் பங்கேற்றார். புளொட் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி சுகவீனம் காரணமாக கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல், அரசாங்கத்துடனான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு பேச்சு உட்பட சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதற்கும், ஏனைய பங்காளிகள் (டெலோ, புளொட்) தனிவழி செல்வதற்கும் இணக்கம் எட்டப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்தார்.

சிலவேளை புளொட், டெலோ என்பன இணைந்து போட்டியிடக்கூடும் அல்லது தனித்தனியே போட்டியிடக்கூடும். அது தொடர்பில் அந்த இரு கட்சியினரும் தீர்மானம் எடுப்பார்கள். இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக எவரும் போட்டியிடுவதில்லை. ஆனால், தேர்தல் முடிவடைந்த பின்னர் மூன்று பங்காளிக் கட்சிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகச் செயற்பட்டு சபைகளில் ஆட்சி அமைப்போம் எனவும் சுமந்திரன் எம்.பி மேலும் தெரிவித்தார்.

## சேபால அமரசிங்கவுக்கு 17 வரை விளக்கமறியல்

ஸ்ரீ தலதா மாளிகையை சந்தேகநபர் அவமதித்தமை இணையத்தில் தனிப்பட்ட மோதலை ஏற்படுத்தியுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் மன்றுக்கு அறிவித்தார். குறித்த விடயம் ஏதும் வகைகளில் பொதுமக்களுக்குச் சென்றடையலாம் என்பதாலேயே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோரிக்கை விடுத்ததை அடுத்து, விடயங்களை பரிசீலித்த நீதவான் விளக்கமறியலை நீடித்ததுடன், பிணை கோரிக்கை தொடர்பான உத்தரவும் அன்றைய தினம் அறிவிக்கப்படும் என்று உத்தரவிட்டார்.

சேபாலவின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்களால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டது. ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய பொலிஸ் மா அதிபரால் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு பணிக்கப்பட்டதுடன், எழுத்து மூல முறைப்பாடு கிடைக்கப்பெற்றதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த 5ஆம் திகதியன்று பெல்லன்விலவில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சேபால அமரசிங்கவை, நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் தரங்க மஹவத்த உத்தரவிட்டிருந்தார்.

மேலும், நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது என்று வலியுறுத்திய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் சேபால அமரசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## மொட்டும் யானையும் ஒன்றாகக் கலந்தன

ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஐ.தே.கவும் மொட்டுக் கட்சியும் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், எந்தெந்த மாவட்டங்களில் யானை அல்லது மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பிலும் பொதுவானதொரு சின்னத்தில் எந்த மாவட்டங்களில் போட்டியிடுவது என்பது தொடர்பிலும் மாவட்டத் தலைவர்களை அழைத்து கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுச் சின்னம் தொடர்பில் இதுவரையில் எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பிலும் எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

## நினைத்துப் பார்க்காத வெற்றி நிச்சயம்

அதிகம். அதனாலேயே கட்டுப்பணத்தைச் செலுத்தி வருகிறது என்றார்.

தேர்தலை எந்நேரம் வேண்டுமாக இருந்தாலும் பிற்போடுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதுபோல நாட்டு மக்களிடத்திலும் தேர்தல் தொடர்பில் போதிய ஆர்வம் இல்லை என்பதால் அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளும் நிலையும் காணப்படுகிறது.

ஜே.வி.பியினருக்கு நினைப்பதுபோல, மக்கள் ஆதரவு பெரிதாக இல்லை. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கைப்பற்றிய திஸ்ஸமஹாராமவைக்கூட அவர்களால் கட்டியெழுப்ப முடியாமல் போனது. நாம் அமைக்க உள்ள கூட்டணி அனைவருக்கும் சவாலாக இருக்கும். எவரும் நினைக்காத வெற்றி கிடைக்கும் என்றார்.

## பரீட்சை குழம்பி விட்டால் பல்கலைக்கழகம் தாமதமாகும்

அந்தக் குற்றத்தில் நீங்களும் பங்காளியாகாதீர்கள். பிரச்சினை இருந்தால் எங்களிடம் தெரிவியுங்கள் என பிரதமர் தினேஷ் குணவர்தன கேட்டுக்கொண்டார்.

'புதியதோர் கிராமம், புதியதோர் நாடு' தேசிய ஒருங்கிணைப்பு பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மாவட்ட செயலாளர்களுடன் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நேற்று (10) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

முடங்கியிருந்த பொருளாதாரம் இப்போது செயற்படுகிறது. முன்னெப்போதையும் விட, பொருளாதார இயந்திரம் மற்றும் சேவை இயந்திரம் செயற்படும் போது, உங்கள் மீதுள்ள பொறுப்பு மற்றும் உங்களுக்கு வழங்கப்படும் புதிய சவால்களை வெற்றிகொள்வதற்கான தேவை அதிகமாக உள்ளது.

இலங்கையில் பத்தாயிரத்து நூறு பாடசாலைகள் உள்ளன. அவற்றில் அரைவாசிக்கும் மேற்பட்ட பாடசாலைகள் 1 ஏக்கர் முதல் 12 ஏக்கர் வரையான காணிகளை கொண்டுள்ளன. அவை குறுகிய கால பயிர்ச்செய்கையில் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது அறிக்கைகளில் எங்கும் குறிப்பிடப்படுவதில்லை.

ஒவ்வோர் அங்குல நிலத்தையும் உற்பத்தித் திறனுக்கு மாற்றுவதில் என்ன குறை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து ஆலோசனை வழங்குவதும் வழிகாட்டுவதும் எமது பொறுப்பு. நாங்கள் புள்ளிவிவரங்களுடன் மட்டும் மட்டுப்படுத்திருக்க முடியாது.

உயர்தரப் பரீட்சை விரைவில் நடக்கவிருக்கிறது. பிரதேச ரீதியாக எந்தவொரு பரீட்சையும் தடைப்படாமல் இருக்க மாவட்ட செயலாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். அது எங்களுக்குரியதல்ல; பரீட்சை ஆணையாளருக்கு உரியது என்று கூறிக்கொண்டிருக்க முடியாது. பரீட்சை ஆணையாளருடன் தொலைபேசியில் பேசி கலந்துரையாடியாவது அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பரீட்சையை குழப்புவதற்கு எவருக்கும் இடமளிக்க வேண்டாம் என்றார்.

## ஆதர்ஷாவின் முன் பிணை நிராகரிப்பு

பேராசிரியர் ஆஷூ மாரசிங்கவின் முறைப்பாட்டுக்கமைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தான் கைது செய்யப்பட்டால், தன்னை முன் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடுமாறு கோரி ஆதர்ஷா குறித்த பிணை மனுவை தாக்கல் செய்திருந்தார். பிணை விண்ணப்பதாரரின் கோரிக்கை தற்போதைக்கு ஏற்புடைய பொருத்தமானது அல்ல என்று அறிவித்த நீதவான், பிணைக் கோரிக்கையை நிராகரித்தார்.

ஆஷூ மாரசிங்கவின் காதலி என்று கூறப்படும் ஆதர்ஷா, தனது நாயை ஆஷூ மாரசிங்க பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்ததுடன், அதுகுறித்த வீடியோவையையும் பகிர்ந்திருந்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுடன் இணைந்தே ஆஷூ மாரசிங்கவுக்கு எதிராக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய ஆதர்ஷா, குறித்த விடயத்தை அறிவித்த நிலையில், அந்த விடயம் வைரலாகியது. ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள் முற்றிலும் பொய்யானவை என்றும், அதற்காக சித்திரிக்கப்பட்ட வீடியோவை பயன்படுத்தி உள்ளதாக ஆஷூ மாரசிங்க, சீ.ஐ.டியில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக ஆதர்ஷா தனது பிணை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## 14 வருடங்களின் பின்னர் தமிழ்...

உபகரணங்களை கடத்திய குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வந்த கனகரத்தினம் ஆதித்யன் என்பவரே விடுவிக்கப்பட்டுள்ளார். 2007 ஆம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில நவீன தொழில்நுட்ப உபகரணங்களை புலிகளின் தலைமையகத்தில் ஒப்படைக்கச் சென்ற வாகனம் வவுனியாவில் கைப்பற்றப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், கனகரத்தினம் ஆதித்யன் கைது செய்யப்பட்டார். கனகரத்தினம் ஆதித்யன் சார்பில் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஸ் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகியிருந்தார்.

## 'வீடு' தேடி வந்தாலும்...

வடக்கு, கிழக்கில் 8 மாவட்டங்களிலும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுமாறு வலியுறுத்தி கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் நேற்று 10 ஆம் திகதிவரை தொடர் ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதி நாளான நேற்று (10) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் மக்கள் ஒன்று திரண்டனர்.

இதன்போது வடக்கு, கிழக்கு சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு பேச்சுவார்த்தையில் சிறுபான்மை தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு ஒரே குரலில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை வலியுறுத்த வேண்டுமென வலியுறுத்தினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடகிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்படவேண்டும். இதில் பெண்கள் 50 சதவீதம் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமையவேண்டும். தற்போது வடக்கு, கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் 1983 களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் மத கலாசார இடங்கள் தொல் பொருள் பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் உடன் நிறுத்தல் வேண்டும். பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

கொரோனாவை விட நாடு, பொருளாதாரத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நாங்கள் தெரிவு செய்து பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பிய அரசியல் வாதிகள் எங்கள் மக்களைப்பற்றி ஒரு நாளும் சிந்திப்பதில்லை. அவர்கள் சிந்தித்திருந்தால் நாங்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய தேவை இல்லை என வாசகங்கள் கொண்ட சுலோகங்களுடன் கோஷம் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து கலைந்துச் சென்றுவிட்டனர்.

## ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப்படவில்லை

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சசார் ஆலோசனைக் குழு அவருடைய தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ரயில்வே திணைக்கள அதிகாரிகள் ஓய்வு பெறுவதால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டாலும் அது ஊடகங்களில் வெளியாகும் அளவுக்கு அதிகமாக இல்லை என வருகை தந்திருந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். ரயில் பயணங்கள் சில இரத்துச் செய்யப்பட்டாலும் ஊடகங்களால் அது பெரிதுபடுத்திக் காட்டப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருவதால் எரிபொருள் விநியோகத்துக்காக அதிகளவான ரயில்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், இதனால் ரயில் போக்குவரத்தை குறிப்பிட்ட அளவு குறைக்க வேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர். அத்துடன், ஊடகங்கள் அறிக்கையிடுவதைப் போன்று ரயில் போக்குவரத்து இரத்துச் செய்யப்படவில்லை என்றார்.

## அரச ஊழியர்களுக்கு கடும் சம்பள சிக்கல்

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி காரணமாக, வரிகள் மூலம் பெறக்கூடிய வருமானம் தொடக்கத்தில் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் அரசாங்கத்தின் வரி வருமானம் வெகுவாக குறைந்தாலும், தேவையான செலவுகளை அரசாங்கமே செலுத்த வேண்டும் என்றார்.

தினசரி பராமரிப்புக்கு போதிய வருமானம் திறைசேரியில் இல்லை. அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், அரச கடனுக்கு செலுத்தும் வட்டி, பிற நலச் செலவுகள் முக்கிய பிரச்சினையாக உள்ளன.

எனவே, மாத இறுதியில், அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அந்த முன்னுரிமை கொடுத்த பிறகு எழும் அத்தியாவசிய நலச் செலவுகளுக்கு கூட போதிய வருமானம் இல்லை.

இந்த வருமானப் பிரச்சினை இவ்வாண்டு முழுவதும் தொடரும் என்பதால் அனைத்து அமைச்சுகளுக்கும், அமைச்சரவையின் பட்ஜெட்டில் இருந்து ஒதுக்கப்படும் பணத்தில் 5 சதவீதத்தை குறைக்க வேண்டும் என அமைச்சரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடுமையான நிதி நெருக்கடியின் போது, யார் ஆட்சி செய்தாலும், பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் வரிப்பணம் மற்றும் வரி அல்லாத வருமானத்தின் மூலமாகவே, இந்தச் செலவுகள் அனைத்தையும் திறைசேரியே ஏற்க வேண்டும். யாருடைய தனிப்பட்ட பணத்திலிருந்தும் நாங்கள் செலவு செய்வதில்லை. அனைத்து செலவுகளும் பொதுமக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படுகிறது. வரி விதிப்பு பொதுமக்களுக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

5 ஆயிரம் பஸ்களைக் கொடுத்தாலும்

# செய்த பாவத்திலிருந்து விடுபட முடியாது



ஒரு பஸ் அல்ல 5 ஆயிரம் பஸ்களைக் கொடுத்தாலும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் அவர் செய்த பாவங்களில் இருந்து விடுபட முடியாதென ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பக்கமே மக்கள் இருக்கிறார்கள். உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷர்கள், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் முடிந்தால் கூட்டணியாகப் போட்டியிடுவதே சிறந்தது எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு செய்யும் பட்சத்தில் மக்களுக்கு யாரை தெரிவு செய்வது என்கிற குழப்பம் ஏற்படாது. அதுபோல வாக்காளர் பட்டியலும் நீண்டு செல்லாது. குறைந்த செலவில் தேர்தலை நடத்தி முடிக்க முடியும் எனவும் தெரிவித்தார். நாட்டை நாசம் செய்தவர்கள் ஒரு பஸ் அல்ல 5 ஆயிரம் பஸ்களைக் கொடுத்தாலும் செய்த பாவத்தைப் போக்கிக்கொள்ள முடியாது. நாடு வீழ்ந்துள்ள ஆழமான சமூக, பொருளாதார நெருக்கடியில் இருந்து எவ்வாறு நாட்டை மீட்டெடுக்க முடியும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எங்காவது கூறியிருக்கிறாரா எனவும் கேள்வி எழுப்பினார்.

## ஒன்றுகூடல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்களது கொழும்பு பிரிவின் ஒன்றுகூடல் இராஜகிரிய, புதகமுவ வீதியில் அமைந்துள்ள பேர்ட்ஸ் பார்க்கில் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலில், போட்டிகள், நிகழ்ச்சிகள், கலைஞர்களின் இசை நிகழ்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளுக்கான அனுமதிச்சீட்டுகளை செயற்குழு உறுப்பினர்களிடமும், நாளன்று (ஜனவரி 22) நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ள முடியுமென சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரியத் கப்ரால் (தொலைபேசி இலக்கம் 0777560708) அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில்

## 56,000 பேரை அரச சேவையில் சேர்த்துள்ளோம்



ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பை எமது அரசாங்கம் கல்வி அமைச்சுக்கு வழங்கியுள்ளது. சுமக்க முடியாத சுமையாக இருந்தாலும் பல வருடங்களுக்குப் பின்னர் நாம் அதைக் கொடுத்தோம். கல்விச் சேவையின் அடிப்படைக் கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றவில்லை என்று எவராலும் கூற முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

மேலும், அரச பணியில் ஓய்வு பெறுவதால் வெற்றிடமாகும் பணியிடங்களை நிரப்பி, தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான ஊழியர்கள் உள்ளனர். கடந்த காலங்களில் 56,000 பேரை அரச சேவைக்கு சேர்த்துள்ளோம். அப்போது நான் பொது நிர்வாக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்தேன். 24,000 பேர் ஆசிரியர் சேவைக்கும், அபிவிருத்திப் பணிகள் மற்றும் ஏனைய அரச பணிகளுக்காக ஏனையவர்களும் இணைப்புச்செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களில் இன்னும் உபரியாக உள்ளனர். அவர்களையும் உற்பத்தித்திறன் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

பெரிய தனியார் தொழிற்சாலைகள் மற்றும் சிறு தொழில்களில் ஆட்கள் உள்ளனர். இவர்களை மாவட்ட அலுவலகங்களுக்கு அழைத்து வந்து இந்த மாபெரும் பணிக்கு உதவுமாறு கூறுங்கள். எங்களின் பல்வேறு துறைகளுக்கும் நலன்பேணல் திட்டங்களிலும் அவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். மாறிவரும் இந்தக் காலகட்டத்தில் உங்கள் அறிக்கைகளில் எந்த இடைவெளியும் இருக்க முடியாது என்பதை மீண்டும் கூறிக்கொள்கிறேன் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

துப்பாக்கி ரவைகளுடன்

## ஐயப்ப பக்தர் விமான நிலையத்தில் கைது

இந்தியா, கேரளவில் உள்ள ஐயப்பன் சுவாமியை தரிசிக்க இலங்கையிலிருந்து செல்லும் ஐயப்பன் பக்தர்களில் ஒருவர் துப்பாக்கி ரவைகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் ஐயப்ப பக்தர்களை சோதனையிட்டபோது சந்தேகநபரிடமிருந்து டி56 ரக துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில், 47 வயதுடைய சந்தேகபர் ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

சந்தேகநபருடன் சென்றிருந்த ஏனைய 20 ஐயப்ப பக்தர்களின் பொதிகளில் 30 கிலோ இரும்புப் பொருட்கள் இருப்பதையும் விமான நிலைய பொலிஸார் கண்டறிந்துள்ளனர். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வத்தளையில் உள்ள இரும்பு வர்த்தக நிலையத்திலிருந்து இந்த இரும்பு பொருட்களைப் பெற்று, இந்தியாவில் விற்பதற்கு முயன்றுள்ளமையும் தெரியவந்துள்ளது.

## 6 சதவீதமான மக்களே ஜே.வி.பிக்கு ஆதரவு



ஆறு சதவீதமான மக்களே ஜே.வி.பியின் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, நாட்டை ஆட்சி செய்யக்கூடிய ஐவரை ஜே.வி.பியில் அடையாளப்படுத்த முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

குருநாகல் மாவட்டத்துக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக கட்டுப்பணத்தை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன நேற்று முன்தினம் (09) செலுத்தியிருந்தது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கு எமக்கு எந்தப் பிரச்சினைகளும் இல்லை. நாமே ரணிலே ஜனாதிபதியாக்கி இருக்கிறோம். தேர்தலில் தோற்று விட்டால் துப்பாக்கியை ஏந்துவதே மக்கள் விடுதலை முன்னணிக்கு வழக்கமாக உள்ளது. தேர்தலில் தோற்ற பின்னர் 6,7 மாதங்களுக்கு அமைதியாக இருந்துவிட்டு, பின்னர் மக்களைத் திரட்டி அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு மக்களை அணி திரட்டுவதற்கு பாரியளவான நிதி தேவை. அவ்வாறான நிதி ஜே.வி.பியிடம் இருப்பதாகவும் தெரிவித்தார். ஜே.வி.பியினரின் கொள்கைகளை ஏற்பவர்கள் நாட்டில் வெறும் 6 சதவீதமானவர்களே இருக்கிறார்கள். நாட்டை ஆட்சி செய்யக்கூடிய 5 பேரை ஜே.வி.பியில் காட்ட முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

## விமான நிலையத்தில் பயணி உயிரிழப்பு

■ டி.கே.ஜி.கபில

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட கனேடிய பிரஜை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நேற்று (10) அதிகாலை விழுந்து உயிரிழந்துள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

புத்திக கருணாரத்ன என்ற 54 வயதுடைய இந்தப் பயணி, இலங்கையின் பெத்தகான பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரும் அவரது தாயாரும் இன்று அதிகாலை 02.18 மணியளவில் கட்டார் எயார்வேஸ் விமானமான QRR-662 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அதிகாலை 03.50 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தின் முகப்பு மண்டபத்தின் ஊடாக சென்று கொண்டிருந்த போது, திடீரென சுருண்டு விழுந்து உயிரிழந்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். தற்போது, பயணியின் சடலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் இலங்கை வருகை



பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் (CPA) செயலாளர் நாயகம் ஸ்டீபன் ட்விக் நேற்று (10) மாலை இலங்கைக்கு வருகைதந்ததாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார். ஸ்டீபன் ட்விக்கின் இலங்கை விஜயத்தில் அவருடன் பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் மூலோபாய மற்றும் செயற்பாட்டுப் பிரதானி செல்வி எமில் டேவிஸும் வருகை தந்துள்ளார்.

> **பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளராக ஸ்டீபன் ட்விக், 2020 ஒகஸ்ட் முதலாம் திகதி நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னர் அவர் ஐக்கிய இராஜ்ஜியத்தின் பாராளுமன்ற உறுப்பினராக 1997 முதல் 2005 வரை மற்றும் 2010 முதல் 2019 வரையும் பணியாற்றியுள்ளார்**

பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளராக ஸ்டீபன் ட்விக், 2020 ஒகஸ்ட் முதலாம் திகதி நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னர் அவர் ஐக்கிய இராஜ்ஜியத்தின் பாராளுமன்ற உறுப்பினராக 1997 முதல் 2005 வரை மற்றும் 2010 முதல் 2019 வரையும் பணியாற்றியுள்ளார்.

பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் ஸ்டீபன் ட்விக்னின் இலங்கை விஜயத்தின் போது, ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

## வட்டிக்கும் வரி

### அறவிடுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பணிப்பு

வாடிக்கையாளர்களால் வங்கிகளில் பேணப்படும் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளின் மீது வங்கிகளால் மாதாந்தம் வழங்கப்படும் வட்டித் தொகைக்கு பிடித்து வைக்கும் வரி அறவீடு, 2023 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் 2023 ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக 2022 டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதியிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் சகல நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில், எந்தவொரு நபரினதும் சேமிப்பு, நிலையான வைப்புகளின் மீது வழங்கப்படும் வட்டிப் பணத்தின் மீது, சில விதிவிலக்குகள் தவிர்ந்த நிலைகளில், 5 சதவீதம் வட்டியை அறவிடுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் தெளிவற்ற தன்மை நிலவுகின்றமையை 'தமிழ்மிரர் வாணிபம்' அறிந்து கொண்டது. குறிப்பாக, இந்த வரி விதிப்பனவு தொடர்பில் அண்மையில் நிதி இராஜாங்க அமைச்சரால் சிரேஷ்ட பிரஜைகளுக்கு சலுகை வழங்கப்படுவது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிலையான வைப்புகளிலிருந்து கிடைக்கும் மாதாந்த வட்டித் தொகை ரூ. 100,000க்கு குறைவாக இருக்குமாயின், அவர்களிடமிருந்து இந்த 5 சதவீத வரி விதிப்பனவை அறவிடப்படாமலிருப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்திருந்தது.

இந்த அறிவித்தலைத் தொடர்ந்து, இந்த வரி விதிப்பனவு நிலையான வைப்புகளிலிருந்து கிடைக்கும் வட்டிக்கு மாத்திரம் அறவிடப்படவுள்ளதாக மக்கள் மத்தியில் தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் முன்னணி அரச மற்றும் தனியார் வங்கிகளின் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த வரி அறவீடு, சிறுவர் சேமிப்பு கணக்குகள் அடங்கலாக, அனைத்துவிதமான சேமிப்பு, நிலையான வைப்புக் கணக்குகள் மீது கிடைக்கும் வட்டிக்கும் பொருத்தமானதாக அமைந்திருக்கும் எனத் தெரிவித்தனர்.

ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த வரி விதிப்பனவு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதுடன், ஜனவரி முதலாம் திகதியிலிருந்து திரளும் வட்டிக்கு இந்த 5 சதவீத வரி விதிப்பனவு வங்கியால் சுயமாக அறவிடப்படும். இது தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு தமது மாதாந்த கணக்கு மீதிகளை சரிபார்க்கும் போது, இந்த அறவீடு பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறான நடைமுறை இதற்கு முன்னர் பதவியிலிருந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், குறித்ததொரு தனியார் வங்கியால் டிசெம்பர் மாதத்துக்குரிய வட்டியின் மீது இந்த நிறுத்தி வைக்கப்பட்ட வரி அறவீடு மேற்கொள்ளப்பட்டு இருந்ததாக அவ்வங்கியின் வாடிக்கையாளர்கள் தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் ஆராய்ந்த போது, குறித்த வங்கியால் டிசெம்பர் மாதத்துக்காக வழங்கப்பட்ட வட்டித் தொகை, வாடிக்கையாளர்களின் கணக்கில் 2023 ஜனவரி முதலாம் திகதி வைப்புச் செய்யப்பட்டு, அத்தொகை மீது 5சதவீத வரி அறவிடப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

ஜனவரி மாதம் முதல் இந்த நடைமுறை அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தமது டிசெம்பர் மாத வட்டித் தொகையின் மீது ஜனவரி மாதத்தில் வரி அறவிட்டிருந்தமை தொடர்பில் குறித்த வங்கியின் வாடிக்கையாளர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட வங்கியின் வாடிக்கையாளர் சேவை அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது, சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட கிளையுடன் தொடர்பு கொண்ட போது, தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதுவரையில் இந்த விடயத்தை தெளிவுபடுத்துவதற்கு சம்பந்தப்பட்ட வங்கி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உங்களுக்கும் உங்கள் வங்கிகளுடனான சேமிப்புக்கணக்குகளின் மீது இவ்வாறான வரி அறவீடுகளுடன் தொடர்புடைய அனுபவங்கள் இருந்தால், எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள். ஏனையவர்களை தெளிவுபடுத்துவதற்கு அது உதவியாக அமையும்.

## உலக தமிழராட்சி மாநாடு படுகொலை நினைவேந்தல்







யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 49ஆவது நினைவேந்தல் நேற்று (10 ) நடைபெற்றது. யாழ்ப்பாணம், முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாடு படுகொலை நினைவாலயத்தில் இரு பிரிவுகளாக இரண்டு தடவைகள் இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தலில் பொது மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் எவ்விதபேதமுமின்றி கலந்துகொண்டு அஞ்சலியை செலுத்த வேண்டுமென பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அழைப்புவிடுத்திருந்த நிலையிலும், இரு பிரிவுகளாக நினைவேந்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று காலை பத்து மணிக்கு நினைவேந்தல் நடைபெறுமென சிவாஜிலிங்கம் அறிவித்திருந்த நிலையில், காலை 9.30 மணியளவில் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நடத்தப்பட்டிருந்தது. இதில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், தமிழரசு மூத்த துணைத் தலைவர் சீ.வீ. கேசிவஞானம் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களும் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். ஆனாலும் ஏனைய கட்சிகளின் ஒரு சில உறுப்பினர்களும் அதேநேரத்தில் மறவன்புலவு சச்சிதானந்தமும் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் காலை பத்து மணியளவில் மற்றுமொரு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் உறுப்பினர்கள் குறிப்பாக டெலோ, புளொட் ஆகிய அமைப்புகளின் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களும் உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய கட்சியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதில் டெலோ அமைப்பை சேர்ந்த கோப்பாய் தவிசாளர் நிரோஷ், புளொட் அமைப்பை சேர்ந்த சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் கிசோர், டெலோவின் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் சதீஸ் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணிப் பிரச்சினைகளை அடுத்த தலைமுறைக்கும் விட்டுச் செல்லக்கூடாது

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப்

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்

புரையோடிப் போயிருக்கும் காணிப் பிரச்சினையை இனிவரும் சந்ததியினருக்கும் விட்டுவைக்கக்கூடாது என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப் தெரிவித்தார்.

காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்டச் செயலணியின் கலந்துரையாடலில் உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

செயலணியின் அமர்வு அதன் இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் தலைமையில் அக்கரைப்பற்று தனியார் விடுதியில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்றது. நிகழ்வின் வளவாளர்களாக சட்டத்தரணியும் செயற்பாட்டாளருமான சரளா இம்மானுவேல், சந்துன் துடுகல ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து உரையாற்றும்போது முஷாரப் எம்.பி கூறியதாவது; கடந்த 30 வருடங்களுக்கு மேலாகத் தீர்வின்றித் தொடரும் இந்தக் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்பட வேண்டும். காணியை இழந்த பல காணிச் சொந்தக்காரர்கள், தங்கள் காணிகளை அடைந்து கொள்ள முடியாமலேயே மரணித்து விட்ட துர்ப்பாக்கிய நிலை இருக்கிறது. பிள்ளைகளுக்கு தங்களது காணிகள் எங்கே இருக்கிறது என்றும் தெரியாது.

காணிகள் விடயத்தில் சகல சமூகத்தாரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பரிபாலனத் திணைக்களம் என்பவை காணிகள் தீர்வு விடயத்தில் இடைஞ்சலாகவும் பெரும் பிரளயத்தை உண்டுபண்ணுபவர்களாகவும் செயற்பட்டு வருகின்றார்கள். அதிகாரிகள் மட்டத்தில் இருக்கும் துறைசார்ந்த அறிவற்ற நிலைமையே, காணிப் பிரச்சினைகள் இழுபட்டுச் செல்வதற்கு பிரதான காரணமாய் அமைந்துள்ளது" என்றார்.

# திருடப்பட்ட நகைகள் மீட்பு



■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு, திராய்மடு, சுவிஸ் கிராமத்தில் கடந்த மூன்றாம் திகதி திருடப்பட்ட 16 பவுன் தங்க நகைகள், ஐந்தாயிரம் ரூபாய் என்பன கொக்குவில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கொக்குவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.கே. யு.பி விமலரத்ன, பெரும்குற்ற பிரிவின் பொறுப்பதிகாரி பி. சசிந்திரா, சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் ஆர். நவராஜன் ஆகியோர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால், சத்துருக்கொண்டான் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (08) மூன்று சந்தேக நபர்களை மடக்கிப்பிடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 'தெய்வீகக் குருமாமணி' விருது

■ அ. அச்சுதன்

தெய்வீக ஆன்மிக சஞ்சிகையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம், நல்லூர் ஆலய மணிமண்டபத்தில், திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதமகுரு வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரக்குருக்களுக்கு அவரின் ஆன்மீக சமூகப் பணிகளை பாராட்டி, ஞாயிற்றுக்கிழமை (08) 'தெய்வீகக் குருமாமணி' என்ற உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



### இறக்காமம் பிரதேச செயலகத்தில்

# காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

■ நூருல் ஹுதா உமர்

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிக்கு உட்பட்ட வரிப்பத்தான்சேனை - 03 கிராம உத்தியோகத்தர் பிரிவில், நீண்ட காலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எஸ். எம் ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு, விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட காணி ஆணையாளர் ஐ.எல். இப்திகா பானு கலந்து கொண்டதுடன் இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி அஹமட் நசீல், கணக்காளர் றிம்ஸியா அர்சாட், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



### வீட்டுக்கூரைக்கான மரங்கள்,

# அத்தியாவசிய பொருட்கள் கையளிப்பு





■ வ. சக்தி

ஆனந்தகிரி அறப்பணி சபையால், ஆரையம்பதியில் மின்ஒழுக்கால் வீடு தீப்பற்றி முற்றாக சேதமடைந்த குடும்பத்துக்கு வீட்டுக்கூரைக்கான மரங்கள், அத்தியாவசிய பொருட்கள் கையளிக்கப்பட்டன.

செல்வாநகர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், சிறிதளவில் உணவுகளை தயாரித்து, மக்களுக்கு விநியோகித்து, தமது வாழ்க்கையை நடத்திவந்த கணவன், மனைவி, ஆண்பிள்ளை என மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தின் வீடு 30.12.2022 ஆம் திகதி மின்ஒழுக்கினால் தீப்பற்றி எரிந்து, உடமைகள் அனைத்தும் நாசமாகின.

இந்நிலையை அறிந்து, மட்டக்களப்பு ஆனந்தகிரி அறப்பணி சபை, இக்குடும்பத்துக்கான உடுதுணிகள், வீட்டுக்கூரைக்கான மரங்கள் என்பவற்றை ஞாயிற்றுக்கிழமை (08) வழங்கிவைத்தது. இதில் ஆனந்தகிரி அறப்பணி சபையின் தலைவர் லோ. தீபாகரன், செயலாளர் நே. பிருந்தாபன், ஊடகவியலாளர் உ. உதயகாந் ஆகியோர் நேரடியாக சென்று, குறித்த பொருட்களை வழங்கிவைத்தனர்.

### செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில்

# 6,465 குடும்பங்களும் 931 குழந்தைகளும் பாதிப்பு

## பொருளாதார நெருக்கடியே காரணம்

■ க. அகரன்

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் பொருளாதார நெருக்கடி காரணமாக 6,465 குடும்பங்களும் 931 குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோர் தொடர்பில் கேட்கப்பட்ட போதே, அவர் அளித்த பதிலில் மேற்குறிப்பிட்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது; பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 6,465 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதுடன், 931 குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 213 கர்ப்பிணித் தாய்மாரும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தடுப்பணை அமைப்பதற்கான பகுதிகளை விடுவிக்குமாறு

# வனவளத்திணைக்களத்திடம் விவசாயிகள் கோரிக்கை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட மண்டைக் கல்லாற்றுக்கு ஊடாக, பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் உவர்நீர் உட்புகுதலை தடுக்கும் வகையில் தடுப்பணை அமைப்பதற்கு ஏற்றவகையில் வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை விரைவாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள், விசாய அமைப்புகள் என்பன துறைசார் திணைக்கள அதிகாரிகளிடம் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாக, 495 மில்லியன் ரூபாய் செலவில் கதவுகளுடன் கூடிய உவநீர் தடுப்பணை அமைக்கும் பணிகள், உலக வங்கியின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதாவது, மண்டைக்கல்லாற்றுக்கான உவநீர் தடுப்பணை இதுவரை அமைக்கப்படாமையால், கடல் பெருக்கு காலங்களில் கடல் நீர் மண்டைக்கல்லாறு ஊடாகவும் முடக்களாறு ஊடாகவும் உட்புகுந்து, வன்னேரிக்குளம், குஞ்சுகுளம், மண்ணியாகுளம் உள்ளிட்ட பகுதிகளில் 6,100 ஏக்கர் வரையான பயிர் செய்கை நிலங்களை உவர் நிலங்களாக மாற்றியுள்ளது. தொடர்ந்தும் ஆணை விழுந்தான், அக்கராயன் குளம், மணியங்குளம் ஆகிய பகுதிகளும் உவநீர் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றன.

எனவே, இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக, வனவளத் திணைக்களத்திடமிருந்து குறிப்பிட்ட சில பகுதிகளை விடுவிக்க வேண்டியுள்ளதாகவும் அவ்வாறு விடுவிக்கப்பட்டதன் பின்னர் வேலைகளை ஆரம்பிக்க முடியும் என கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெல் உலர்த்த மண்ணெண்ணெய் வேண்டும்

■ நடராசா கிருஸ்ணகுமார்

நெல் உலர்த்தி துப்புரவு செய்யும் நிலையத்துக்கு மண்ணெண்ணெய் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளன செயலாளர் மு. சிவமோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தில் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான நெல் உலர்த்தி துப்புரவு செய்து, களஞ்சியப்படுத்தி வைக்கும் நிலையத்தில், அதன் சாதனங்களை இயங்குவதற்கான மண்ணெண்ணெய் இல்லாமையால், அதன் பணிகள் கடந்த சிறுபோகத்தில் இருந்து மந்தகதியில் இயங்கி வருகின்றன. இப்போகத்தில் முழுமையாக செயல் இழக்கும் நிலையில் உள்ளது. எனவே, இதற்கான மண்ணெண்ணெய் கிடைக்க ஏற்பாடுகள் செய்து தரவேண்டுகின்றோம் எனவும் தெரிவித்தார்.

**" கனகாம்பிகைக் குளத்தில் அமைந்துள்ள நெல் உலர்த்தி துப்புரவு செய்யும் நிலையத்தில், அதன் சாதனங்களை இயங்குவதற்கான மண்ணெண்ணெய் இல்லாமையால், முழுமையாக செயல் இழக்கும் நிலை**

# முல்லைத்தீவு குடும்பஸ்தர் வவுனியாவில் கைது

## நகைகளும் மீட்பு

■ க. அகரன்

முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தர், வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் உள்ள வீட்டுக்குள் மூன்றாம் திகதி, வீடு புகுந்து சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரால் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பூ. கஜேந்திரன் தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான திஸாநாயக்கா, திலீப், பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி, தயாளன், தர்மகீர்த்தி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.



குறித்த விசாரணைகளின் அடிப்படையில், முல்லைத்தீவைச் சேர்ந்த 44 வயதுடைய குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து திருடப்பட்ட காப்பு, சங்கிலி உள்ளிட்ட நகைகளும் மீட்கப்பட்டன.

### தமிழ்த் தேசியத்தை நேசிக்கும்

# கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய கோரி உண்ணாவிரதம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவில் முன்னாள் போராளியான வேலுப்பிள்ளை மாதவமேஜர், தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணையக் கோரி ஆரம்பித்த உண்ணாவிரத போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.



முன்னாள் பேராளியும் சமூக செயற்பாட்டாளருமான வேலுப்பிள்ளை மாதவமேஜர், நேற்று முன்தினம் (09) காலை 8.10 மணிக்கு குறித்த உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார்.

இவரது தந்தை நாட்டுப்பற்றாளராகவும், மூன்று சகோதரர்கள் மாவீரர்களாகவும் உள்ள நிலையில், இவரும் முன்னாள் போராளியாக இருந்து புனர்வாழ்வு பெற்று, தற்போது சமூக செயற்பாட்டாளராகத் திகழ்கின்றார்.

குறித்த நபரின் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில், அரசியல் பிரமுகர்கள் வருகைதந்து கலந்துரையாடியுள்ளனர்.



# போதைப்பொருளுடன் இராணுவ சிப்பாய் கைது

■ ஷேன் செனவிரத்ன

ஸ்ரீ தலதா மாளிகையின் பாதுகாப்புக்கு இணைவாக கடமையாற்றிய இராணுவ சிப்பாய், ஹெரோய்ன் பொதியுடன் கைது செய்யப்பட்டதாக கண்டி பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இராணுவ சிப்பாய், தலதா மாளிகையில் இருந்து சில மீற்றர் தூரத்தில் உள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் ஒரு சிப்பாய் என்பதுடன் குட் ஷெட் பஸ் நிலையத்துக்கு அருகில் ஹெரோயின் போதைப்பொருள் பொதியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெளலகல, ஹொடியாதெனிய பிரதேசத்தில் வசிக்கும் குறித்த இராணுவ சிப்பாய், கடந்த மூன்று வருடங்களாக ஹெரோய்ன் போதைக்கு அடிமையாகியிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் 20 வருடங்களுக்கும் மேலாக இராணுவ சேவையில் இருப்பவர் என்பதுடன் ஹெரோய்ன் பயன்படுத்துவதற்கு தேவையான பணத்தை தேடிக்கொள்வதற்காக, இராணுவ துப்பாக்கியைப் பயன்படுத்தி கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டாரா என்பது தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இ.போ.ச ஹட்டன் டிப்போவில்

# பஸ் சேவைகள் பல இடைநிறுத்தம்

■ செ.தி.பெருமாள்

இ.போ.ச ஹட்டன் டிப்போவிலிருந்து மலையகத்தின் பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த பல பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டு உள்ளதால் மாணவர்கள் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக சாமிமலை, மஸ்கெலியா, கண்டி போன்ற இடங்களுக்கான பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக சிவனொளிபாதமலைக்கு வரும் யாத்திரிகர்கள் அதிகளவில் ரயிலில் வருகை தருவதால், அனைத்து பஸ்களும் ஹட்டன் மற்றும் நல்லதண்ணி நகரங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபட்டு வருவதால், ஏனைய சேவைகள் முடங்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள், நோயாளிகள், அரச உத்தியோகத்தர்கள், பருவ சீட்டுகளைப் பெற்றவர்கள் தனியார் பஸ்களில் அதிகளவில் பணம் கொடுத்து சரியான நேரத்தில் செல்ல முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

### மலையக மக்கள் தொடர்பில்

# விசேட கவனம்

## தொழிற்சங்க பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது

■ எஸ்.கணேசன்

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவடைந்ததையடுத்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் இடையில் தொழில் அமைச்சில் நடைபெற்றது.



இதன்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட சட்டங்கள் கொண்டுவரப்படும் எனவும், மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகின்றன. எனவே, அவர்களின் தொழிற்றுறையும் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கு என்று பல சட்ட ஏற்பாடுகள் காணப்பட்டாலும், அது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகள் குறைவு.

அத்தோடு, தொழிலாளர்களுக்கு தொழில் திணைக்களங்களில் வழங்கப்படும் முக்கியத்துவங்கள் மிகவும் குறைவாகவே உள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்களை பாதுகாக்கும் உரிமை சார்ந்த மற்றும் நலன்புரி சார்ந்த சட்ட மூலத்தை உருவாக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினர் மூலம் அமைச்சருக்கு யோசனை முன்வைக்கப்பட்டதாக அதன் உபதலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அதுமட்டுமில்லாமல் ஏனைய தொழிற்சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், சிவில் அமைப்புகள் அனைத்து தரப்பினரையும் இணைத்து, இந்த 200ஆவது வருடத்தில், நாட்டுக்கு பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் அடையாளத்தை ஏற்படுத்திய பெருந்தோட்ட தொழிலாளர்களை கௌரவிக்கும் வகையிலான கருத்துகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

பெருந்தோட்டத்துறை தொடர்பில் வழங்கப்படும் சகல கடிதங்களையும் தமிழ் மொழியில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் பொதுவான தொழிலாளர் சட்டம் ஒன்று உருவாக்கப்படும் போது, பெருந்தோட்ட தொழிலாளர்கள் மீது தாக்கத்தை செலுத்தும் விடயங்கள் தொடர்பில் தனித்தனியாக விசேட அவதானம் செலுத்துமாறும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அதன் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், உபதலைவர் பாரத் அருள்சாமி, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், ஒன்றிணைந்த மலையக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.







# கௌரவிப்பு

2021ஆம் நடைப்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சிறந்த பெறுபேறுகளை நுவரெலியா கல்வி வலயத்தில் பெற உதவிய ஆங்கில ஆசிரியர்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், கடந்த வருடம் வலய மட்டத்தில் நடைப்பெற்ற ஆங்கில மொழி தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகள், நுவரெலியா கல்வி வலய ஆங்கில பாட உதவி கல்விப் பணிப்பாளர் வி. சாந்தகுமாரின் தலைமையில், நுவரெலியா காமினி தேசிய பாடசாலையில் நடைபெற்றன.

(பி. கேதீஸ்)

### கண்டி மாவட்டத்தில்

# 9,550 புதிய வாக்காளர்கள் பதிவு

■ ஷேன் செனவிரத்ன

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பதற்காக கண்டி மாவட்டத்தில் 18 வயதை பூர்த்தி செய்த 9,550 இளைஞர், யுவதிகள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, 2022ஆம் ஆண்டின் தேர்தல் பெயர்பட்டியலுக்கு அமைய கண்டி மாவட்டத்தில் 11,68,697 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கண்டி மாவட்டத்தில் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் முன்னெடுக்கப்படுவதுடன், இன்றுவரை (10) சுயாதீன குழுக்கள் மூன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

கண்டி மாவட்ட செயலாளர் மற்றும் தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன தென்னகோனின் மேற்பார்வையில் கண்டி மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் எச்.டி.என் சம்பத் பெர்ணான்டோவின் வழிநடத்தலில் கட்டுபணம் செலுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.






# முட்டை கொள்வனவில் இருந்து கண்டி மக்கள் பின்வாங்கினர்

■ ஷேன் செனவிரத்ன

மக்களுக்கு குறைந்த விலையில் முட்டையை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், கண்டியில் நடவடிக்கை ஒன்று முன்னெக்கப்பட்டதுடன், இதன்போது கண்டி மக்கள் முட்டை வாங்குவதற்கு பெரிதாக முன்வரவில்லை.

அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆலோசனைக்கமைய நாடு முழுவதும் முட்டை விநியோகிக்கும் நடவடிக்கையின் மற்றுமொரு அங்கம், கண்டியிலும் நேற்று முன்தினம் (09) ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது இது தொடர்பான அறிவித்தல் பொதுமக்களுக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டிருந்த போதிலும் கண்டி மக்கள் முட்டை கொள்வனவில் ஆர்வம் காட்டியிருக்கவில்லை.

நேற்று முன்தினம் பகல் 1 மணியளவில் குளியாப்பிட்டியிலிருந்து 15,000 முட்டைகளுடன் லொறியொன்று வந்ததுடன், இந்த லொறி மத்திய வர்த்தக சந்தைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது.

# ஓய்வுபெறும் அதிபருக்கு கௌரவம்

■ நீலமேகம் பிரசாந்த்

35 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறும் நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கார்லபேக் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் ஏ.சவரிமுத்து கௌரவிக்கப்பட்டார்.

அவருக்கான கௌரவிப்பு நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.



இந்நிகழ்வில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா மொக்கா தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொது கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி மதியம் 2.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.ஜோன்சன் தலைமையில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில், புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாடசாலை பழைய மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என கல்லூரி அதிபர் எஸ்.ஜோன்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தரமற்ற கோதுமை மா வழங்கப்படுவதாக

# ஸ்டொக்கம் தொழிலாளர்கள் குற்றச்சாட்டு

■ நீலமேகம் பிரசாந்த்

சாமிமலை, ஸ்டொக்கம் தோட்டத்தில் தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட கோதுமைமா தரமற்ற நிலையில் இருப்பதாக தோட்ட மக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

வழங்கப்பட்ட கோதுமை மாவின் நிறம் கருமையான நிறத்தில் காலாவதியான கோதுமைமாப் போல காணப்படுவதாகவும் உண்ணும் போது ஒருவகையான மணம் வீசுவதாகவும் ஸ்டொக்கம் தோட்ட மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மாதம் ஒருமுறை தோட்ட நிர்வாகத்தால் சம்பளத்தில் ஒரு தொகை அறவிடப்பட்டு, தோட்ட தொழிலாளர்களுக்கு கோதுமை மா வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்படும் கோதுமை மாவே தரமற்று காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில், தோட்ட நிர்வாகத்திடம் கேட்டபோது, இம்மாதம் கோதுமைமா வழங்குவதை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே, தரமான கோதுமை மாவை வழங்க தோட்ட நிர்வாகம் முன்வர வேண்டுமென ஸ்டொக்கம் தோட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



### ஹட்டன்– கொழும்பு வீதியின்

# போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் கடவளை பகுதியில் பாரிய மரமொன்று முறிந்து வீதியில் விழுந்ததால், குறித்த வீதியுடனான போக்குவரத்து ஒரு வழிப்போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டது.

அத்துடன் தொலைபேசி கம்பங்களும் முறிந்து விழுந்துள்ளதாகவும் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மரம் நேற்றுமுன்தினம் (09) இரவு 9 மணியளவில் முறிந்து விழுந்தமையால் ஒருமணிநேரம் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்ததாகவும் பின்னர் பிரதேசவாசிகள் மற்றும் கினிகத்தேனை பொலிஸார் இணைந்து மரத்தை வெட்டி அகற்றிய நிலையில், தற்போது ஒரு வழி போக்குவரத்துக்கே பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த வீதியின் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பயிர்களை மேயும் வேலிகளும் கேள்விக்குறியாகும் எதிர்காலமும்

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்வதை அவதானித்த பல்வேறு தரப்பினரும் மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், வர்த்தக சமூகத்தினர் உள்ளிட்டவர்களை அழைத்து, விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தளவுக்கு போதைப்பொருள் பாவனை மலிந்துவிட்டது. ஒவ்வொருநாளும் வகைதொகையின்றி போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக, நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதைப்பொருட்களும் கைப்பற்றப்படுகின்றன. எனினும், முற்றுமுழுதாக கட்டுப்படுத்தவே முடியவில்லை.

பாடசாலைகளுக்கு அருகில், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுகின்றனர். பூட்டிய பாடசாலைகளுக்கு இரவு வேளைகளில் நுழைந்து கஞ்சா இழுத்தவர்களும், பாடசாலை நேரத்தில் மலசலக்கூடங்களுக்குச் சென்று புகைத்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதை அடுத்து, மாணவர்களின் புத்தகப்பைகள் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. சீருடையில் வரிசையாக நிற்கும் ஆண் பொலிஸார், பெண்களின் புத்தகப்பைகளை சோதனைக்கு உட்படுத்தியமைக்கு கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின.

சமூகத்தில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த, சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு பொலிஸாரின் கைகளிலேயே உள்ளன. எனினும், 'பயிர்களை வேலிகள் மேய்ந்தாற்போல', வீட்டிலேயே கஞ்சா வளர்த்த குற்றச்சாட்டுக்காக மொனராகலையைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

அவ்வதிகாரியின் தலைமையில், மாணவர்களின் புத்தகப்பைகள் சோதனைக்கு உட்படுத்தப்படும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாயின், தனக்கு வேண்டப்படாத ஒருவருடைய பிள்ளையின் புத்தகப்பைக்குள் கஞ்சாவை வேண்டுமென்றே அவர் போடமாட்டார் என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை.

நகர்புறங்களில் இருக்கும் பிரதான பாடசாலைகள் சிலவற்றின் மாணவ, மாணவிகள் ஒன்றுசேர்ந்து போதைப்பொருளை பயன்படுத்துகின்றமை ஒன்றும் புதிதல்ல; பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறான மாணவர்கள் செல்லும் பாடசாலைகளில் எவ்விதமான புத்தகப்பை சோதனைகளும் முன்னெடுக்கப்படவில்லை. நகரங்களுக்கு வெளியிலேயே கடுமையாக முன்னெடுக்கப்பட்டன.

எனினும், குற்றச்செயல்களை தடுக்கவேண்டிய தார்மீக பொறுப்புகளைக் கொண்டிருக்கும் பொலிஸுக்குள் அதுவும் அதிகார மட்டத்தில் இருப்போரிடம் நல்லசிந்தனை இல்லாமை கவலைக்குரியதாகும்.

'ஒரு சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப் போல, முழு பொலிஸாரையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. " நீங்களே! கஞ்சா செடிகளை வளர்க்கின்றீர்கள், உங்களால் எங்களுடைய வீட்டையும் வளவையும் சோதனையிட முடியாது" என சாதாரண பொதுமகன், பொலிஸாரை பார்த்து கேள்வியெழுப்பினால், மௌனமாக இருப்பதே பதிலாக இருக்கும்.

தற்போதைய இளம் சமுதாயத்தினர், புதைகுழியை நோக்கி விரைந்து பயணித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. ஆகையால், போதையை ஒழிக்க ஓரணியில் திரள்வதே அவசியம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பிரம்மத்தில் இணையும் வழி என்ன என்று சொன்னாலும் அதன் உண்மை பற்றி எம்மால் கூறமுடியாது.

காற்று, வெப்பம், நிலம், ஆகாயம் எல்லாமே பிரம்மத்தில் அடக்கம். பிரபஞ்சம் இறைவன் ஆட்சியில் உள்ளது. அதன் அகண்ட ரூபம் இயம்புவதற்கு அரிது.

நாங்கள் வாழும் பூமி பற்றியே எமக்கு சரியாகச் சொல்லமுடியாது. பரந்த ஆகாயத்தில் பல்கோடி நட்சத்திரங்கள். இவைகளுடன் பூமிப்பந்தை ஒப்பிட்டால் ஒரு தூசிக்கும் குறைவானது. நட்சத்திரம், கிரகங்கள், வால்வெள்ளிகள் என்று இவற்றில் சிறு அங்கம் சூரியக் குடும்பம்.

இவற்றை ஆளும் தலைவன் திருவடியில் இணைவதே ஆன்மாவுக்கான பாக்கியம். உயிர்கள் யாவும் எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்தனவோ யாரறிவார்?

இந்த உயிரினங்களில் மானிடப் பிறவியும் ஒன்று! ஒவ்வோர் உயிருக்கும் ஒவ்வொரு சக்தியுண்டு. சிற்றறிவுடன் பிரபஞ்சத்தை அளக்க முடியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

23 நாள்களில்

# வரவிருக்கும் ஜனாதிபதியின் தீர்வு



எம்.எஸ்.எம் ஐயூப்

எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னர், அதாவது இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக கடந்த மாதமும் அதற்கு முந்திய மாதமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்த போதிலும், அது நிறைவேறும் என்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

கடந்த நவம்பர் மாதம் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இந்த வாக்குறுதியை முதன்முதலில் வழங்கினார். வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்ததன் பின்னர், தாம் பாராளுமன்றத்தில உள்ள சகல அரசியல் கட்சிகளையும் அழைத்து, இது தொடர்பாகக் கலந்துரையாடுவதாகவும் அவர் அப்போது தெரிவித்தார்.

அப்போது பெப்ரவரி மாதம் நான்காம் திகதிக்கு சுமார் இரண்டரை மாதங்கள், அதாவது 80 நாள்கள் இருந்தன. கடந்த 80 ஆண்டுகளாக, பல நூறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியும், 30 வருட கால ஆயுதப் போரொன்றை நடத்தியும் தீர்க்க முடியாது போன ஒரு பிரச்சினையையே, இவ்வாறு 80 நாள்களில் தீர்ப்பதாக ஜனாதிபதி அன்று கூறினார்.

1940களில் இருந்து 80 ஆண்டுகள் பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்க்க முடியாது போன பிரச்சினையைத் தீர்க்க. மேலும் 80 ஆண்டுகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பது இதன் அர்த்தம் அல்ல! பிரச்சினை அவ்வளவு சிக்கலானதாக உள்ளதால், அதைத் தீர்ப்பது அவ்வளவு எளிதல்ல என்பதையே சுட்டிக் காட்டுகிறோம்.

எனினும், கடந்த 80 ஆண்டுகளாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது, பிரச்சினையின் சகல பக்கங்களும் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டு இருப்பதால், சம்பந்தப்பட்ட தரப்பினர் நேர்மையாகச் செயற்பட்டால், மேலும் ஊரிரு சுற்றுப் பேச்சுகளில் தீர்வைக் காணலாம். எனவேதான், ஒரே நாளில் இதைத் தீர்க்கலாம் என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் அப்போது கூறியிருந்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் முடிவடைந்ததன் பின்னர், அரசியல் கட்சிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவேன் என்ற தமது வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றினார். கடந்த மாதம் 13ஆம் திகதி, அவர் அந்தக் கூட்டத்தை ஜனாதிபதி செயலகத்தில் கூட்டினார்.

அந்தநிலையில், அதற்கு ஒரிரு நாள்களுக்கு முன்னர், தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து, ஒரு பொதுவான நிலைப்பாட்டில் இருந்து, இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள நடவடிக்கை எடுத்தன. அக்கட்சிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளின் போது, ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றுமாறு கூறி, மூன்று முக்கிய கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைப்பதென முடிவு செய்யப்பட்டது. எடுத்ததற்கெல்லாம் முரண்பட்டுக்கொள்ளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனின் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் இந்த உடன்பாட்டுக்கு வந்தமை முக்கிய விடயமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணிகளை அபகரிப்பதை நிறுத்தி, அபகரித்த காணிகளை திருப்பிக் கொடுக்க வேண்டும்; 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்; சமஷ்டி கட்டமைப்புக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும் என்பனவே அந்தக் கோரிக்கைகளாகும்.

டிசெம்பர் 13ஆம் திகதி கூட்டத்தின் போதும், சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார். அவ்வாறேயானால், ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர், தமது மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு சுமந்திரனும் விக்னேஸ்வரனும் அந்தக் கூட்டத்தில் கூறினர். அதைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜாதிக்க ஹெல உருமய கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட எவரும் எதிர்க்கவில்லை.

ஜனாதிபதி அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற ஒப்புக் கொண்டார். 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பாக, அன்றே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்றும் அவர் கூறியிருந்தார். ஜனவரி மாதத்தில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளை நடத்தி விடயத்தை முடிக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்ததாக, ஜனாதிபதி செயலகம் அறிவித்து இருந்தது.

பின்னர், கடந்த ஐந்தாம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஒரு மணி நேர பேச்சுவார்த்தை நடைபெற்றது. அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிறுவதில், எந்தவொரு முன்னேற்றமும் இல்லை என்பதை அப்போது தமிழ்த் தலைவர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர். அதன்பினனர் 10ஆம் திகதி (நேற்று) முதல் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இன்று ஜனவரி 11ஆம் திகதியாகும். ஜனாதிபதி தமது வாக்குறுதியை நிறைவேற்ற இன்னமும் 23 நாள்கள் மட்டுமே உள்ளன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விதித்த காலக்கெடுவின்படி, 20 நாள்களே இருக்கின்றன. அதற்குள் தீர்வை எட்ட முடியுமா?

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால், இது மிகவும் பொருத்தமானதொரு தருணமாகும். ஏனெனில், நாட்டில் இனவாத சக்திகள் மிகவும் பலவீனமாகவே இப்போது இருக்கிறார்கள். முன்னர் கடும் இனவாதியாக இருந்த சம்பிக்க ரணவக்க, சற்று மாறி இருக்கிறார். விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் அரசியல் அநாதைகள் போலாகிவிட்டார்கள். அவர்கள் ராஜபக்ஷர்களின் உதவியிலேயே தமது இனவாத தாக்குதல்களை நடத்தினார்கள். இப்போது ராஜபக்ஷர்களும் தேர்தலை சந்திப்பதற்கே அஞ்சுகிறார்கள்.

சாதாரண காலங்களில் இனப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ஒருவர் கூறியிருந்தால் விமல், கம்மன்பில போன்றோர் எவ்வாறு குதித்து இருப்பார்கள் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். அதற்கும் மேலாக தமிழ்க் கட்சிகள் ஓரிரு நாள்களில் சமஷ்டி முறையிலான தீர்வொன்றை கேட்டால் அவர்கள் என்ன செய்திருப்பார்கள்? நாடெங்கிலும் கூட்டம் நடத்தி இனவாதத்தைத் தூண்டி, பெரும்பான்மையின மக்களை உசுப்பேற்றி இருப்பார்கள். பௌத்த பிக்குகளும் நாட்டை குழப்பி இருப்பார்கள். இம்முறை அது போன்ற எதுவும் இடம்பெறவில்லை.

அதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரை இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட இளைஞர்கள் யுவதிகள், இனவாதத்துக்கு எதிராகவும் குரல் எழுப்பினார்கள். இப்போது மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் கொத்து ரொட்டி, டொபி, உள்ளாடைகள் போன்ற பிரசாரங்களும் மருத்துவர் ஷாபி விவகாரம் போன்ற பிரசாரங்களும் அவற்றை பரப்பிய சிங்கள ஊடகங்களும் அவற்றை தூக்கிப் பிடித்துக் கொண்டு, மக்களை உசுப்பேற்றிய ஊடகவியலாளர்களும் எள்ளிநையாண்டி பண்ணப்படுகின்றார்கள்.

அதாவது, பெரும்பான்மையினத் தலைவர்களும் மக்களும் ஊடகங்களும் இனவாதப் போக்கை கைவிட்டுவிட்டார்கள் என்பதல்ல இதன் அர்த்தம். இப்போதைக்கு அவர்கள் பலவீனமாக இருக்கிறார்கள் என்பதே தெரிந்துகொள்ள வேண்டியதாகும். எனவே, இது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகளை முன்வைக்க சிறந்ததொரு தருணமாகும்.

ஆனால், அரசியல்வாதிகளுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உண்மையான தேவை இருக்கிறதா என்பதே கேள்வியாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரலாற்றில், 2000ஆம் ஆண்டுக்கு முன்னைய காலம், அதிகாரத்துக்காக இனவாதத்தை மிக மோசமாக பாவித்த காலமாக இருந்தது.

அதன் பின்னர் அவர், சில முக்கிய முயற்சிகளை எடுத்தார் என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது. 2002ஆம் ஆண்டு, புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகளின் போது, தமது அரசியல் பாதிக்கப்படலாம் என்பதை அறிந்திருந்தும் அவர் சமஷ்டி தீர்வொன்றுக்காக புலிகளுடன் உடன்பாட்டுக்கு வந்தார்.

ஆனால், அவரும் இம்முறை நடந்து கொள்ளும் முறை சற்று சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. டிசெம்பர் 13ஆம் திகதி கூட்டத்தை அடுத்து, மிகுதியாக இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், அரச நிறுவனங்கள் கைப்பற்றி இருக்கும் காணிகளை விடுவிக்கவும் அவர் நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஐந்தாண்டுகளாகியும் எல்லை நிர்ணய பணிகள் முடிவடைந்து, இல்லாவிட்டால் மாகாண சபைத் தேர்தலை பழைய விகிதாசார முறைப்படியாவது நடத்த நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

இவை போன்ற, சாதகமான சமிக்ஞைகளை காட்ட அரசாங்கம் தவறிவிட்டது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த ஐந்தாம் திகதி கூட்டத்தின் போது ஜனாதிபதியிடம் மிகக் காட்டமாகத் தெரிவித்ததாக தமிழ் ஊடகங்கள் தெரிவித்தன.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, ஜனாதிபதி அதிக நேரம் செலவழிக்கத் தேவையில்லை. அவர் தமது செயலாளரை பணித்தால் போதுமானது. எனவே தான் தமிழ் அரசியல் கட்சிகளும் இப்போது மீண்டும் நம்பிக்கை இழந்துள்ளன.

அக்கட்சிகளுக்கும் அவருக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைப் பற்றி, இக்கட்டுரை எழுதப்படும் வரை தகவல் எதுவும் கிடைத்திருக்கவில்லை. ஆனால், அப்பேச்சுவார்த்தைக்கும் ஒரு நிகழ்ச்சி நிரல் இல்லை எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் அங்கலாய்த்துக் கொண்டு இருந்தார்கள்.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட இருந்த கூட்டம் மூன்று நாள்களாகத் தொடரும் எனக் கூறப்பட்டது. ஜனாதிபதி ஊடக தலைப்புகளுக்கும் அதன் மூலம் உலகத் தலைவர்களுக்குக் காட்டவும் நடவடிக்கை எடுக்கிறாரா அல்லது இதய சுத்தியுடன் செயலாற்றுகிறாரா என்பது இந்த மூன்று நாள்களில் தெரிய வரும்.

## கடிதங்கள்

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை

### போட்டிப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடவும்

2021ஆம் ஆண்டு கார்த்திகை மாதம், நடத்தப்பட்ட ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சையின் பெறுபேறுகள், ஒரு வருட காலமாகியும் இதுவரையில் பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படாமல் உள்ளமை குறித்து பரீட்சார்த்திகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பரீட்சையை நம்பிக்கையோடு எழுதிய பரீட்சார்த்திகளின் முடிவை, ஒரு வருட காலம் தாமதப்படுத்துவது அவர்களின் சட்ட ரீதியான எதிர்பார்ப்பை மழுங்கடிப்பதாக அமைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாட்டிலுள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து, ஆசிரியர் பல்கலைக்கழகம் உருவாக்க உள்ளதாக கல்வி அமைச்சர் அண்மையில் தெரிவித்தார். எனவே, குறித்த பரீட்சையை எழுதிய ஆசிரியர்களினது பெறுபேற்றை உடனடியாக வெளியிட்டு, அவர்களை நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி, ஆட்சேர்ப்பை மேற்கொள்வதன் மூலம், ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் திறந்த போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பிலும் எதுவிதமான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தான் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் மூலம் ஆசிரியர் கல்வியலாளர் சேவைக்குள் உள்வாங்கப்படுவதானது புதிய வகை நியமனமாக அமையாது என்பதால், அதனை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரீட்சார்த்திகள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நூருல் ஹுதா உமர்

கேரளா

# பிரியாணி மாணவியின் மரணத்தில் புதிய திருப்பம்

கேரளாவில் பிரியாணி உட்கொண்ட யுவதியொருவர் உயிரிழந்த விவகாரத்தில், புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கேரள மாநிலம், காசர்கோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் 'அஞ்சு ஸ்ரீ பார்வதி'. கல்லூரி மாணவியான இவர் கடந்த 31 ஆம் திகதி ஒன்லைன் வாயிலாக பிரியாணியொன்றை ஓர்டர் செய்து குடும்பத்துடன் உட்கொண்டுள்ளார்.

இந்நிலையில் பார்வதியுடன் உணவருந்திய 4 பேரும் நலமுடன் இருந்துள்ள நிலையில், பார்வதிக்கு மாத்திரம் சுகயீனம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் உடனடியான வைத்திய சாலைக்கு



அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிசிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து தரமற்ற பிரியாணியை உட்கொண்டமையினாலேயே அஞ்சுஸ்ரீ உயிரிழந்ததாக அவரது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த உணவகத்திற்குச் சீல் வைக்கப்பட்டது.

இந்நிலையில், இரத்தத்தில் விஷம் கலந்ததால் உடல் உறுப்புகள் செயலிழந்து அஞ்சு ஸ்ரீ உயிரிழந்துள்ளார் எனப் பிரேத பரிசோதனையில் தெரியவந்தது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில், 'அஞ்சுஸ்ரீ, 2 ஆண்டுகளுக்கு மேலாக ஒருவரைக் காதலித்து வந்துள்ளார் எனவும், அந்நபர் புற்றுநோய் பாதிப்பால் ஒரு மாதத்திற்கு முன்னர் உயிரிழந்துள்ளார் எனவும், அதனால் ஏற்பட்ட மன வருத்தத்தினாலேயே அஞ்சுஸ்ரீ எலி மருந்தை உட்கொண்டுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

சென்னை



## மனநலம் பாதித்த 160 பேர் மீட்பு

சென்னை பெருநகர காவல்துறையின் `காவல் கரங்கள்` மூலம் மீட்கப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்ட 160 வட மாநிலத்தவர்கள் நேற்று முன்தினம் அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்னை மாநகர பகுதியில் ஆதரவின்றி சுற்றித்திரிந்த அவர்கள், ரயில் மூலம் தன்னார்வலர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மருத்துவத்துறை அமைச்சர் சுப்ரமணியன் மற்றும் காவல் ஆணையர் சங்கர் ஜிவால் ஆகியோர் குறித்த 160 பேருக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி வைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தருமபுரி

## மாடுகளோடு மல்லுக்கட்டிய அமைச்சர்

தருமபுரி மாவட்டம் ,பென்னாகரத்தில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் பொங்கள் விழாக் கொண்டாட்டமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இக்கொண்டாட்டத்தின் போது அலங்கரிக்கப்பட்ட மாடுகளுக்கு பா.ம.கவின் கௌரவ தலைவரான ஜிகே. மணி வாழைப்பழங்களை வழங்கினார்.

ஆனால் அந்த மாடு வாயை திறக்க மறுத்தது. இதனால் அருகில் நின்ற தொண்டர், அந்த மாட்டின் வாயை திறக்க வைத்து, பழத்தை வாயில் திணிக்கும் நிலை ஏற்பட்டது.

இந்த மாடு தான் இப்படி என்றால், வேறு ஒரு



மாட்டிற்கு வாழைப் பழத்தை உரித்து வழங்கினார் ஜி.கே. மணி. அதுவும் வாய் திறக்க மறுத்தது. எனினும் மனம் தளராத ஜி.கே மணியோ , அருகில் நின்ற மற்றொரு மாட்டிற்கு வாழைப்பழைத்தை ஊட்டிவிட முயன்றார்.

எனினும் அந்த மாடும் வாயைத் திறக்கவில்லை. இந்நிலையில் இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றது.

புது டெல்லி

## பயணிகள் 54 பேரை விட்டுச் சென்ற விமானம்




பெங்களூரில் இருந்து புது டெல்லி செல்லும் தனியார் விமானமொன்று அண்மையில் 54 பயணிகளை விட்டுச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூர் விமான நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம்(09) காலை 'go first ' என்ற விமானம் டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றது.

ஆனால் குறித்த விமானம் போர்டிங் பாஸ்களுடன் விமான நிலையத்தில் காத்திருந்த 54 பேர் இல்லாமல் அவர்களுடைய லக்கேஜ்களுடன் புறப்பட்டு சென்றது.

இதுகுறித்து பயணிகள் தங்களுடைய டுவிட்டர் பக்கத்தில் பிரதமர் அலுவலகம், மத்திய விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா ஆகியோரை டேக் செய்து புகார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

## வசமாக சிக்கிய 'மேக்கப் திருடன்'

விருகம்பாக்கத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் வழக்கறிஞர் முருகன். இவரது மனைவி சரோஜா கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வீட்டை பூட்டிவிட்டு வெளியே சென்றுள்ளார்.

இந்நிலையில் சிறிது நேரம் கழித்து வீடுதிரும்பிய அவர், வீட்டின் கதவில் இருந்த பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் உள்ளே சென்று பார்த்தபோது, வீட்டிற்குள் மறைந்திருந்த கொள்ளையன் சரோஜாவின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி வீட்டில் இருந்த மூன்று பவுன் நகை மற்றும் 10,000 ரூபாய் பணத்தைத் திருடிச் சென்றுள்ளான்.

இந்நிலையில் இது குறித்து புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் இருந்தCCTV கெமராக்களைப் ஆய்வு செய்த பொலிஸார், நண்பரின் வீட்டில் பதுங்கி இருந்த ஆனந்த் என்பவனைக் கைது செய்தனர்.

விசாரணையில்' நாகப்பட்டினத்தை சேர்ந்த ஆனந்த் 2016 ஆம் ஆண்டு சினிமாவய்ப்பு தேடி சென்னை



வந்துள்ளார் எனவும், சினிமாவில் நடனம் ஆடும் மங்கையருக்கும், டிவி சீரியலில் துணை நடிகர் நடிகைகளுக்கும் மேக்கப் போடும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் 'போதைக்கு அடிமையான அவர் தொழிலில் கவனம் செலுத்தாததால் போதிய பணி கிடைக்கவில்லை என்றும் இந்நிலையில் குறித்த வழக்கறிஞரின் வீட்டில் கொள்ளையடிக்க முயன்றதாகவும் இதன்போது எதிர்பாராத விதமாக அவரது மனைவி வந்ததால் கத்தியை காட்டி மிரட்டி விட்டு தப்பி சென்றதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

மேலும் பொலிஸாரிடம் சிக்காமல் இருக்க மொட்டை அடித்துக் கொண்டு முக அமைப்புகளை மாற்றி,மேக்கப்போட்டு மாறுவேடத்தில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர்

## 75 ஆண்டுகளுக்குப் பின்னர் மின்சாரம்

ஜம்மு காஷ்மீரில் உள்ள பல கிராமங்கள் மின்சார வசதியற்று காணப்படுகின்றன.

இந்நிலையில் பிரதமரின் 'ஹர் கர் பிஜிலி யோஜனா ' திட்டத்தின் கீழ் தெற்கு காஷ்மீரில் உள்ள குக்கிராமம் ஒன்றிற்கு நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் முதன்முறையாக மின்சாரம் கிடைத்துள்ளது.

அந்தவகையில் 75 ஆண்டுகளுக்குப் பின்னர் மின்சாரம் கிடைத்ததையடுத்து பொதுமக்கள் வீடுகளில் மின்விளக்குகளை ஒளிரச் செய்தும், மின்வாரிய ஊழியர்கள் டிரான்ஸ்பார்மர் முன் நடனமாடியும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.



# அமைச்சரவைத் தீர்மானங்கள் சில...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இவ்வாரத்துக்கான அமைச்சரவை சந்திப்பில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில் சில...

### மூலோபாயங்கள் மற்றும் திட்டவரைபு

வலுசக்தித் துறையை நிலைபெறுதகு வகையில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை அடையாளங்கண்டு பொருத்தமான பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கும், குறித்த பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சரவையால் எட்டப்படுகின்ற தீர்மானங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் பின்னூட்டல்களை மேற்கொள்வதற்காக உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த உபகுழு ஏற்புடைய பங்கீடுபாட்டு நிறுவனங்கள், துறைசார் தொழில் நிபுணர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் ஒருசில கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மின்சக்தி மற்றும் வலுசக்தி துறைசார்ந்த பரிந்துரைகள் மற்றும் திருப்புமுனைகள் உள்ளடங்கலான திட்டவரைபொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 75 ஆவது சுதந்திரதின வைபவம்

2023 பெப்ரவரி 04 ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கும் 75 ஆவது சுதந்திரதின வைபவம் மற்றும் அதற்கு இணையாக அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் உள்ளிட்ட நிகழ்ச்சித்திட்டத்தை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார்.

### 2023 மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்கான முன்மொழிவுகள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த மின்கட்டணத் திருத்தம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் அமைச்சரவையால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற நிதிநிலைமையின் கீழ் மின்சார சபைக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு திறைசேரிக்கு இயலாமையால், நாட்டில் தொடர்ச்சியான மின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக மின்பாவனையாளர்களுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை இயன்றவரை குறைத்து மின்விநியோகத்தை மேற்கொள்வதற்கான செலவை மாத்திரம் ஈடுசெய்து கொள்ளும் வகையில் தற்போதுள்ள மின்கட்டணத்தை திருத்தம் செய்வதைத் தவிர்ந்த வேறெந்த மாற்று வழிகள் இல்லையென்பது அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்க்காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கிகாரம் வழங்குவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது :

இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச மின்கட்டணத் திருத்தம் தொடர்பாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறித்த தரப்பினர்களிடம் கேட்டறிந்து ஆராய்ந்துள்ள ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், 15.02.2022 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த திருத்தங்களை முன்வைத்தல்.

அதுவரைக்கும், மின்சக்தி




தொழிற்றுறை தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள பொதுக் கொள்கை வழிகாட்டல் திருத்தங்களுக்கமைய இடைக்காலப் படிமுறைகளாக,, 2023.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை மின்சார சபையின் உத்தேச மின்கட்டணத்தைத் திருத்தம் செய்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் திருத்தங்கள் எதுவும் சமர்ப்பிக்காவிடின், குறித்த திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபை படிமுறைகளை மேற்கொண்டு தொடர்ந்துவரும் மாதாந்த மின்கட்டணப் பட்டியலில் தேவையான இணக்கங்களை மேற்கொள்ளல்.

### விருப்பக் கோரல்கள்

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் முழுமையான திட்டத்திற்கமைய, விமானப் போக்குவரத்துக்களைப் போலவே விமானப் போக்குவரத்து அல்லாத ஏனைய பணிகளுக்காகவும் வர்த்தக வாய்ப்புக்களை செயற்படுத்தி பல்நோக்கு வர்த்தக மத்திய நிலையமாகக் குறித்த விமான நிலையத்தை பரிமாற்றுவதற்காக ஆற்றல்வளம் காணப்படுகின்றது. அதனால், அரச-தனியார் பற்குடமை முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் குறித்த வசதிகள் மற்றும் சொத்துக்களைப் பயனுறு வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான குச்சவெளி சுற்றுலா அபிவிருத்தி பிரதேசத்தை மையப்படுத்தி கொரியா சுற்றுலா நிறுவனத்தின் நிதியனுசரணையின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் 'சமுதாயமட்ட சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தை' நடைமுறைப்படுத்தவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொரியா சுற்றுலா நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு குறித்த கருத்திட்ட யோசனை தொடர்பாக சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு முழுமையான உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2.172 தென்கொரிய வொன் பில்லியன்கள் (2.172 bn Won) நிதியுதவி வழங்குவதற்கும், அதன் முதலாம் கட்டமாக குறித்த சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முழுமையான திட்டத்தைத் தயாரித்தல், பயிற்சி வேலைத்திட்டங்களை தயாரித்தல், மற்றும் முன்னோடி பயிற்சி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தென்கொரிய வொன் 400 மில்லியன்களை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தல்

1961 ஆம் ஆண்டின 28 ஆம் இலக்க பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் மற்றும் விளைவாய்ந்தவையான திருத்த ஏற்பாடுகள் மூலம் உராய்வுநீக்கி மசகு எண்ணெய் தொழிற்துறைக்கு பிரவேசிப்பதற்கு எதிர்பார்த்துள்ள புதிய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்வதற்காக மற்றும் அதற்கமைய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி விடயதானத்திற்கப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்கள் எமது நாட்டின் உராய்வுநீக்கி மசகு எண்ணெய் சந்தையை முழுமையாக தாராளமயப்படுத்தியுள்ளார்.

தற்போது எமது நாட்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 26 நிறுவனங்கள் உரிமப்பத்திரதாரர்களாக உராய்வுநீக்கி மசகுஎண்ணெய் தொழிற்துறையில் ஈடுபடுகின்றன. பாவனையாளர்களுக்கு மிகவும் போட்டியான விலையில் உராய்வுநீக்கி எண்ணெயை கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக் கிட்டும் வகையில் உயர்தரத்துடன் கூடிய, புத்தாக்க மற்றும் போட்டித்தன்மையுடன் கூடிய உற்பத்திகளை எமது நாட்டின் சந்தைக்கு உள்வருவதற்கு வாய்ப்புக்களை வழங்கும் வகையில் இலங்கை உராய்வுநீக்கி மசகு எண்ணெய் சந்தைக்குப் புதிதாக பிரவேசிப்பவர்களைத் தெரிவு செய்வதற்காக தகமைகளைக் கோருகின்ற விண்ணப்பங்களைக் கோருவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### கணிவில்லைகள் கொள்வனவு

இப்பெறுகை தொடர்பாக சர்வதேச போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, M/S விஷன் சொலூஷன் லங்கா (பிரைவெட்) லிமிட்டட் நிறுவனத்திற்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### ஜனாதிபதியின் தெளிவூட்டல்

அடுத்துவரும் 25 ஆண்டுகளில் இலங்கையில் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் துறைகளில் அபிவிருத்தியை எட்டும் நோக்கில் கீழ்க்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்குத் தெளிவூட்டியுள்ளார்.

(i) கீழ்க்காணும் புதிய நிறுவனங்களைத் தாபித்தல்

-வரலாறு தொடர்பான நிறுவனம்

-பொருளியல் மற்றும் வர்த்தக நிறுவனம்

-பெண்கள் மற்றும் பால்நிலை தொடர்பான நிறுவனம்

-அரச மற்றும் அரச கொள்கைகள் தொடர்பான பல்கலைக்கழகம்

-விவசாய தொழிநுட்ப பல்கலைக்கழகம்

-காலநிலை மாற்றங்கள் தொடர்பான பல்கலைக்கழகம்

விளையாட்டு பல்கலைக்கழகம்

(ii) கீழ்க்காணும் பணிகளுக்கான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்

பெண்கள் சட்டங்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழு

பால்நிலை சமத்துவச் சட்டம்

பெண்களை வலுவூட்டல் சட்டம்

சிறுவர் பாதுகாப்பு சட்டம்

காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டம்

சமூக நீதி தொடர்பான ஆணைக்குழு சட்டம்

மீள் வனமாக்கல் மற்றும் தாவரக்காப்பு சட்டம்

உயிர் இருப்புக்கள் சட்டம்

மகாவலி ஆறு

சிங்கராஜ வனம்

சிவனொளிபாதமலை வனாந்தரம் /மக்கள் சூனியப் பிரதேசம்

ஹோர்டன் சமவெளி

நக்கல்ஸ் மலைத்தொடர்

இராமர் பாலம்

சமுத்திர வளங்கள் ஆய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான சட்டங்கள்

முத்துராஜவெல (பாதுகாக்கப்பட்ட) சட்டம்

விசேட தேவையுடையவர்களுக்கான பாதுகாப்பு சட்டம்

கீழ்வரும் புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் :

நகர்ப்புற வனம் 75

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்காக கொழும்பில் 1996 வீட்டு அலகுகள்

தேசிய இளைஞர் தளம் தொடர்பான கருத்திட்டம் மற்றும் வேலைத்திட்டங்கள் ஆகியனவே முன்வைக்கப்பட்டுள்ளன.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வென்ற பாகிஸ்தான்

நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

நியூசிலாந்து: 255/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிஷெல் பிறேஸ்வெல் 43 (42), டொம் லேதம் 42 (52), கிளென் பிலிப்ஸ் 37 (53), டரைல் மிற்செல் 36 (55) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 5/57, உஸாமா மிர் 2/42, மொஹமட் நவாஸ் 1/38, மொஹமட் வாஸிம் 1/43)

பாகிஸ்தான்: 258/4 (48.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் ஆ.இ 77 (86), பாபர் அஸாம் 66 (82), பக்கர் ஸமன் 56 (74), ஹரிஸ் சொஹைல் 32 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிஷெல் பிறேஸ்வெல் 2/44, கிளென் பிலிப்ஸ் 1/35, டிம் செளதி 1/55)

போட்டியின் நாயகன்: நசீம் ஷா

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.





# ஓய்வை அறிவித்த கரெத் பேல்

வேல்ஸ் அணித்தலைவரான கரெத் பேல், 33ஆவது வயதில் கால்பந்தாட்ட த்திலிருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

வேல்ஸின் சிறந்த கால்பந்தாட்டவீரராகக் கருதப்படும் பேல், வேல்ஸுக்காக அதிக போட்டிகளாக 111 போட்டிகளில் விளையாடியுள்ளதோடு, அதிக கோல்களை 41 கோல்களையும் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் ஆகியவற்றுக்காக விளையாடியிருந்த பேல், இறுதியாக ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் கழகமான லொஸ் ஏஞ்சலஸுக்காக விளையாடியிருந்தார்.



# பாலமுனையில் கராத்தே அங்குரார்ப்பணம்

எம்.என்.எம். அப்ராஸ்

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையோடு பாலமுனை மின்ஹாஜ் மகா விததியாலயத்தில் (தேசிய பாடசாலை) கராத்தே பயிற்சி அங்குரார்பண நிகழ்வு, கழகத் தலைவர் ஐ.எல்.எம். பாயிஸ் தலைமையில் மின்ஹாஜ் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) அதிபர் கே.எல். உபைதுல்லாஹ்வின் நெறிப்படுத்தலில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



# போர்த்துக்கல் பயிற்றுவிப்பாளர் றொபேர்ட்டோ மார்டினெஸ்

போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக பெல்ஜியத்தின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் றொபேர்ட்டோ மார்ட்டினெஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணத்தில் மொரோக்கோவிடம் தோற்று காலிறுதிப் போட்டியோடு போர்த்துக்கல் வெளியேறியதைத் தொடர்ந்து போர்த்துக்கல்லின் முன்னாள் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பெர்ணாண்டோ சன்டோஸ் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

முன்னதாக குழுநிலைப் போட்டிகளோடு பெல்ஜியம் வெளியேறியதோடு, மார்ட்டினெஸ் பதவி விலகியிருந்தார்.



இதேவேளை, போர்த்துக்கல்லின் அணித்தலைவர் கிறிஸ்டியானோ றொனால்டோவின் எதிர்காலம் குறித்து அவருடன் கலந்துரையாடவுள்ளதாக மார்ட்டினெஸ் கூறியுள்ளார்.

சர்வதேச கால்பந்தாட்டத்திலிருந்து

# பிரான்ஸின் கோல் காப்பாளர் ஹியூகோ லோரிஸ் ஓய்வு

சர்வதேச கால்பந்தாட்டத்திலிருந்து தனது 36ஆவது வயதில் ஓய்வு பெறுவதாக பிரான்ஸின் கோல் காப்பாளர் ஹியூகோ லோரிஸ் அறிவித்துள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை பிரான்ஸ் வென்றபோது பிரான்ஸுக்குத் தலைமை தாங்கிய லோரிஸ், பிரான்ஸுக்காக அதிக போட்டிகளாக 145 போட்டிகளில் விளையாடியுள்ளதோடு, அதிக போட்டிகளில் தலைமை தாங்கியதாக 121 போட்டிகளில் தலைமை தாங்கியுள்ளார்.



பெரு

# போராட்டத்தில் 34 பேர் உயிரிழப்பு

தென் அமெரிக்க நாடான பெருவில் அரசுக்கெதிரான போராட்டத்தில் வெடித்த வன்முறையில் 34பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்த காஸ்டிலோ பதவி நீக்கப்பட்டு, கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் காஸ்டிலோ-வை விடுவிக்கக் கோரியும், தற்போதைய ஜனாதிபதி டினா பொலுவார்ட் பதவி விலக வலியுறுத்தியும் நடைபெற்ற போராட்டத்தில் நாடு முழுவதும் இதுவரை 34 பேர் உயிரிழந்துள்ளனர்.



சீனா

# ஒரே மாதத்தில் 20 விஞ்ஞானிகள் உயிரிழப்பு

சீனாவில் ஒரே மாதத்தில் 20 விஞ்ஞானிகள் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது. குறிப்பாக அந்நாட்டில் ஒமைக்ரோனின் `BF.7` துணை வைரஸ்களின் பரவலானது நாளுக்கு நாள் வெகுவான அதிகரித்து வருவதால் அங்கு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் சீனாவில் கடந்த ஒரு மாதத்திற்குள் மாத்திரம் விஞ்ஞானிகள் 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் குறிப்பாக டிசம்பர் 15-ஆம் திகதி முதல் ஜனவரி 4-ஆம் திகதிக்குள் இந்த மரணங்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜேர்மனி

# சிக்கலில் ஜேர்மனி

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 10 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானிய , பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் பொருளாதாரத்தடைகளை விதித்தன.

இதனால் ரஷ்யாவும் ஐரோப்பிய நாடுகளுக்கான கச்சா எண்ணெய், எரிவாயு,உரம், மற்றும் தானியங்களின் விநியோகத்தை முழுமையாக நிறுத்தியது.

இதனால் கடுமையான எரிவாயு நெருக்கடியினை சந்தித்து வரும் ஜேர்மனி, வேறு வழியின்றி ஆற்றல் தேவைகளை சமாளிக்க அனல் மின்சாரம் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

எனினும் அதற்கு நிலக்கரி தேவைப்படுவதால் சுரங்கங்களை தோண்டும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி, ஜேர்மனியில் உள்ள L□tzerath என்ற கிராமத்தில் நிலத்திற்கு அடிப்பகுதியில் பழுப்பு நிலக்கரி இருப்பது தெரியவந்திருக்கிறது.

எனவே, அங்கு சுரங்கத்தை அமைத்து நிலக்கரியை எடுக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. எனினும், சுரங்கத்தை தோண்ட அந்த கிராமத்தில் உள்ள குடியிருப்புகளை இடிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அங்கிருந்த மக்கள், வீட்டை காலி செய்ய தொடங்கியுள்ளனர்.

அதேசமயம் நிலக்கரி சுரங்கங்கள் அதிகம் தோண்டப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




நைஜீரியா

# துப்பாக்கி முனையில் 32 பேரைக் கடத்திய நபர்

நைஜீரியாவில் ரயில் நிலையத்தில் வைத்து பயணிகள் 32 பேரைத் துப்பாக்கி முனையில், மர்ம நபர் ஒருவர் கடத்திச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

போகோ ஹராம், அல்கொய்தா , ஐஎஸ் உள்ளிட்ட தீவிரவாத இயக்கங்கள் செயற்பட்டுவரும் நைஜீரியாவில் கடத்தல் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில், அண்மையில் இடோ என்னும் மாகாணத்தில் அமைந்திருக்கும் டாம் இகிமி என்ற ரயில் நிலையத்தில் துப்பாக்கியுடன் நுழைந்த நபர்ஒருவர் அங்கிருந்த பயணிகள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதில் பலர் படுகாயமடைந்த நிலையில் அவர்களில் 32 பேரை அந்நபர் துப்பாக்கிமுனையில் பணையக்கைதிகளாகக் கடத்திச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடத்தப்பட்டவர்களை மீட்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீனா

# 17 பேரின் உயிரைப் பறித்த இறுதி ஊர்வலம்

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் உள்ள நான்சாங் நகரில் அண்மையில் இடம்பெற்ற இறுதி ஊர்வலமொன்றில் ஆண்கள், பெண்கள் என ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் மயானத்தை அடைவதற்கு முன்பாக இறந்தவரின் உடலை வீதியின் ஓரத்தில் வைத்துவிட்டு ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் இறுதி அஞ்சலிச் சடங்குகளைச் செய்து கொண்டிருந்துள்ளனர்.

அப்போது வீதியில்வந்து கொண்டிருந்த கனரக வாகனமொன்று, திடீரென கட்டுப்பாட்டை இழந்து இறுதி சடங்கில் பங்கேற்றவர்களின் கூட்டத்திற்குள் பாய்ந்தது.

இதில் அங்கு நின்று கொண்டிருந்த பலரும் தூக்கி வீசப்பட்டனர். பலர் கனரக வாகனத்தின் சக்கரங்களில் சிக்குண்டனர்.



இந்நிலையில் இவ்விபத்தில் 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், 22 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் சிகிச்சைபெற்று வருபவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

இந்நிலையில் பனிமூட்டம் காரணமாக இவ்விபத்து நடைபெற்றிருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.


அமெரிக்கா

# இனி அது தேவையில்லை; அசத்தும் ரோபோ

ரோபோக்களின் செயற்பாடுகள் ப்ரோகிராம் கோடிங் ( Program Coding) மூலம் தீர்மானிக்கப்பட்டுவந்த நிலையில், அது தெரியாதவர்கள் கூட வாய்மொழி மற்றும் சைகைமொழியால் பிறப்பிக்கும் உத்தரவுகளை பின்பற்றி அதற்கேற்ப செயற்படக்கூடிய ரோபோகள் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

Tactagon Technology என்ற நிறுவனமே 'டைட்டன் பாய் 'என அழைக்கப்படும் குறித்த ரோபோவை உருவாக்கியுள்ளது.

குரல் மற்றும் மோசன் கன்ரோல் (motion control) மூலம் இயங்கக்கூடிய குறித்த ரோபோவானது ஒரு அடி உயரம் கொண்டது எனவும் இலங்கை மதிப்பில் சுமார் 6 லட்சம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 11 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.